காலம் : 3 மணி நேரம் **முதல் திருப்புதல் தேர்வு – ஜனவரி – 2023** மொத்த மதிப்பெண் :100

**பத்தாம் வகுப்பு – சமூக அறிவியல் - R.செந்தில்குமார், பட்டதாரி ஆசிரியர் - அரசு மேல்நிலைப் பள்ளி – அனுமந்தை**

---

**I. சரியான விடையைத் தேர்வு செய்யவும் பகுதி – I 14 X 1 = 14**

1. பத்தொன்பதாம் நூற்றாண்டு முடிவடையுந்தருவாயில் கிழக்கு ஆசியாவில் உதயமான வலிமை வாய்ந்த நாடு எது?

அ) சீனா ஆ) ஜப்பான் இ) கொரியா ஈ) மங்கோலியா

2. உலகத்தின் எந்த பகுதியில் டாலர் அரசியல் ஏகாதிபத்தியத்தை விரும்பவில்லை ?

அ) ஐரோப்பா ஆ) லத்தீன் அமெரிக்கா இ) இந்தியா ஈ) சீனா

3. நாம்தாரி இயக்கத்தை உருவாக்கியவர் யார் ?

அ) பாபா தயாள் தாஸ் ஆ) பாபா ராம்சிங் இ) குருநானக் ஈ) ஜோதிபா பூலே

4. வேலூர் கோட்டையில் புதிய இராணுவ விதிமுறைகளை அறிமுகப்படுத்தக் காரணமாயிருந்த தலைமை தளபதி யார்?

அ) கர்னல் பேன்கோர்ட் ஆ) மேஜர்ஆர்ம்ஸ்ட்ராங் இ) சர் ஜான் கிரடாக் ஈ) கர்னல் அக்னியூ

5.இந்தி எதிர்ப்பு மாநாடு எங்கே நடத்தப்பெற்றது?

அ) ஈரோடு ஆ) சென்னை இ) சேலம் ஈ) மதுரை

6. பழைய வண்டல் படிவுகளால் உருவான சமவெளி ____________.

அ) பாபர் ஆ) தராய் இ) பாங்கர் ஈ) காதர்

7. தேசிய தொலையுணர்வு மையம் அமைந்துள்ள இடம் __________

அ) பெங்களூரு ஆ) சென்னை இ) புது டெல்லி ஈ) ஹைதராபாத்

8.தமிழ்நாட்டின் மிகப் பெரிய நீர்மின் சக்தி திட்டம்

அ) மேட்டூர் ஆ) பாபநாசம் இ) சாத்தனூர் ஈ) துங்கபத்ரா

9.புகழ் பெற்ற சிந்திரி உரத் தொழிலகம் அமைந்துள்ள மாநிலம்.

அ)ஜார்க்கண்ட் ஆ)பீகார் இ)இராஜஸ்தான் ஈ)அசாம்

10.பொருந்தாததைத் தேர்ந்தெடுக்கவும்

அ) கோதுமை ஆ) நெல் இ) தினைவகைகள் ஈ) காபி

11. நமது வெளியுறவுக் கொள்கையுடன் தொடர்பு இல்லாதது எது?

அ) உலக ஒத்துழைப்பு ஆ) உலக அமைதி இ) இனச் சமத்துவம் ஈ) காலனித்துவம்

12. **கூற்று:** இந்தியாவும் பிரான்சும் சர்வதேச சூரியசக்திக் கூட்டணியைத் தொடங்கியுள்ளன

**காரணம்:** இது கடகரேகை மற்றும் மகரரேகை ஆகியவற்றுக்கு இடையேயான நாடுகளைச் சூரிய ஆற்றலுக்கான ஒத்துழைப்பில் ஒன்றிணைப்பதற்காகும்.

அ) கூற்று சரி. காரணம் கூற்றிற்கான சரியான விளக்கமாகும். ஆ) கூற்று சரி. காரணம் கூற்றிற்கான சரியான விளக்கமல்ல.

இ) கூற்று தவறு: காரணம் சரி ஈ) கூற்று, காரணம் இரண்டும் தவறு.

13. ஒரு நாடு, ஒரே மாதிரியான வரி என்பதை எந்த வரி உறுதிப்படுத்துகிறது?

அ) மதிப்புக் கூட்டு வரி (VAT) ஆ) வருமான வரி இ)பண்டங்கள் மற்றும் பணிகள் வரி ஈ) விற்பனை வரி

14. இந்தியாவில் தோன்றியதால் உணவு தானிய உற்பத்தியில் தன்னிறைவு பெற வழி வகுத்தது.

அ) நீலப்புரட்சி ஆ) வெள்ளைப் புரட்சி இ) பசுமைப் புரட்சி ஈ) சாம்பல் புரட்சி

**எவையேனும் 10 வினாக்களுக்கு விடையளி - பகுதி II (கட்டாய வினா எண்:28) 10X 2 =20**

15. ஐரோப்பிய போர்க்குணம் வாய்ந்த தேசியவாதத்தின் மூன்று வடிவங்கள் எவை?

16. முத்துத் துறைமுக நிகழ்வை விவரி.

17. ஆங்கிலேய இந்தியாவில் விவசாயிகளின் கிளர்ச்சி எவ்வாறு வகைப்படுத்தப்பட்டுள்ளன?

18. தென்னிந்திய நல உரிமைச் சங்கத்தால் வெளியிடப்பட்ட செய்தித்தாள்களின் பெயர்களைக் குறிப்பிடுக.

19. பாளையக்காரர்களின் கடமைகள் யாவை?

20. இந்தியாவின் அண்டைநாடுகளின் பெயர்களைக் கூறுக

21. புயலின் போது வானிலை மையம் மீனவர்களை எவ்வாறு எச்சரிக்கிறது.?.

22. 'மண்' – வரையறு.

www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu

23. இந்தியாவின் முக்கிய எண்ணெய் உற்பத்தி பகுதிகளைக் குறிப்பிடுக.

24. இடம்பெயர்வு என்றால் என்ன? அதன் வகைகளைக் குறிப்பிடுக.

25. ஆளுநராக நியமிக்கப்படுவதற்கான தகுதிகள் யாவை ?

26. இந்தியாவின் செம்மொழிகள் எவை?

27. தனி நபர் வருமானம் என்றால் என்ன?

28. தொழில்முனைவோர் என்பவர் யாவர்?

**எவையேனும் 10 வினாக்களுக்கு விடையளி - பகுதி III (கட்டாய வினா எண்:42) 10X 5 =50**

29. கோடிட்ட இடங்களை நிரப்புக

அ) __________ ஆம் ஆண்டில் ஜப்பான் சீனாவுடன் வலுக்கட்டாயமாகப் போரிட்டது.

ஆ) ஐரோப்பியக் குழுமத்தின் தலைமையகம் ___________ நகரில் அமைந்துள்ளது.

இ) உலகிலேயே மிக நீளமான அணை ______

ஈ). ________ தமிழ்நாட்டின் மாநில விலங்கு ஆகும்.

உ) இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் பாதுகாவலன் ___________ ஆகும்

30. ஜெர்மனியுடன் தொடர்புடைய வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையின் சரத்துக்களை கோடிட்டுக் காட்டுக

31. ஐக்கிய நாடுகள் சபையின் அமைப்பு, செயல்பாடுகளை ஆய்வு செய்க ?

32. வேலூரில் 1806இல் வெடித்த புரட்சியின் கூறுகளை விளக்குக.

33. சாலைப் பாதுகாப்பு விதிகள் பற்றி எழுதவும்

34. இமயமலையின் உட்பிரிவுகளையும் அதன் முக்கியத்துவம் பற்றியும் விவரி.

35. **வேறுபடுத்துக** 1. வானிலை மற்றும் காலநிலை. 2. புதுப்பிக்க இயலும் வளங்கள் மற்றும் புதுப்பிக்க இயலா வளங்கள்.

**காரணம் கூறுக.** மழைநீர் சேமிப்பு அவசியம்.

36. பல்நோக்குத் திட்டம் என்றால் என்ன? ஏதேனும் இரண்டு இந்திய பல்நோக்கு திட்டங்கள்பற்றி எழுதுக.

37. இந்திய அரசியலமைப்பின் சிறப்புக் கூறுகளை விளக்குக.

38. இந்தியப் பிரதம அமைச்சரின் பணிகள் மற்றும் கடமைகள் யாவை?

39. நாட்டு வருமானத்தை கணக்கிடுவதற்கு தொடர்புடைய பல்வேறு கருத்துக்களை விவரி.

40. பசுமைப் புரட்சி ஏன் தோன்றியது என்பதைப் பற்றி விவரி.

41. **காலக்கோடு வரைக**. எவையேனும் முக்கிய ஐந்து நிகழ்வுகளுக்கு காலக்கோடு வரைக (1900 – 1920)

42. **இந்திய வரைப்படத்தில் குறிக்கவும்** - 1. ஜான்சி 2.மீரட் 3. ஜாலியன்வாலாபாக் 4. பம்பாய் 5.பராக்பூர்

**பின்வரும் வினாக்களுக்கு விடையளி - பகுதி IV 2X 8 =16**

43. **அ.** கிழக்கிந்திய கம்பெனியாரை எதிர்த்து கட்டபொம்மன் நடத்திய வீரதீரப் போர்கள் பற்றி ஒரு கட்டுரை வரைக

**(அல்லது)**

**43 ஆ.** நீதிக்கட்சியின் தோற்றத்திற்கான பின்புலத்தை விளக்கி சமூகநீதிக்கான அதன் பங்களிப்பைச் சுட்டிக்காட்டவும்.

44. அ) கொடுக்கப்பட்டுள்ள இந்திய வரைப்படத்தில் கீழ்காணும் இடங்களை குறிக்கவும்

1.ஆரவல்லி மலைத்தொடர் 2.அதிக மழை பெறும் இடம் 3. இரும்பு கிடைக்கும் இடம் 4.சிலிகா ஏரி
5.வடகிழக்கு பருவக்காற்று 6.கரிசல் மண் 7.காபி விளையும் பகுதி 8.அதிக கல்வியறிவு பெற்ற மாநிலம்

**(அல்லது)**

44. ஆ) கொடுக்கப்பட்டுள்ள தமிழக வரைப்படத்தில் கீழ்காணும் இடங்களை குறிக்கவும்

1.வைகை ஆறு 2.மேட்டூர் அணை 3. நாகப்பட்டினம் 4.கிழக்கு தொடர்ச்சி மலை 5.நெய்வேலி
6.வண்டல் மண் 7.கரும்பு விளையும் பகுதி 8.தூத்துக்குடி துறைமுகம்

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com